பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 11 2025 12 40
ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஹாரில் புதிய அரசு அமைப்பதற்கான பணியில் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

2. மக்கள் வரிப் பணம் பொறுப்புடன் செலவழிக்கப்படுவதை தணிக்கை துறையினர் முறையாக கண்காணிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பஹ்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சருடன் இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

4. பத்திரிகைகள் துடிப்புடனும், பொறுப்புடனும் செயல்படுவதை வலுப்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக தகவல்

5. ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

6. *Deaflympic* போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிஹாரில் புதிய அரசு அமைப்பதற்கான பணியில் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

அம்மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 202 இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இதையடுத்து புதிய அரசு அமைப்பது குறித்து லோக் ஜனசக்தி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. சிராக் பஸ்வான், ஹிந்துஸ்தானி அவாமி மோர்ச்சா தலைவர் திரு. சந்தோஷ் சுமன் உள்ளிட்டோர் ஐக்கிய ஜனதாதள தலைவரும், முதலமைச்சருமான திரு. நிதிஷ் குமாரை பட்னாவில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அதேவேளையில் ஐக்கிய ஜனதா தள செயல் தலைவர் திரு. சஞ்சய் ஜா, மற்றும் அக்கட்சியை சேர்ந்த மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் ஆகியோர் புதுதில்லியில் பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் □ா உடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக தற்போதைய அரசின் அமைச்சரவை பட்னாவில் நாளை கூடி சட்டப்பேரைவையைக் கலைக்க ஆளுநருக்கு பரிந்துரை செய்ய உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே ஐக்கிய ஜனதா தள கட்சியின் புதிய சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் பட்னாவில் நாளை நடைபெற உள்ளது.

அதன் பின் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் கூட்டுக் கூட்டத்தில் புதிய முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மக்கள் வரிப் பணம் பொறுப்புடன் செலவழிக்கப்படுவதை தணிக்கை துறையினர் முறையாக கண்காணிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று தணிக்கை தின கொண்டாட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், தணிக்கை அதிகாரிகள் தங்களது தணிக்கைத் திறனை மேம்படுத்திக்கொள்வது அவசியம் என்று வலியுறுத்தினார்.

கடந்த 1860ஆம் ஆண்டு இந்திய தலைமை தணிக்கை அலுவலகம் தொடங்கப்பட்ட தினம் தணிக்கை தினமாக கொண்டாடப்படுகிறது.

<<<<>>>>

இந்தியா-பஹ்ரைன் இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் அப்துல் லத்தீஃப் பின் ரஷீத் அல் சயானியுடன் பேச்சு நடத்தியிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சர்வதேச மற்றும் பிராந்திய அளவிலான தற்போதைய சூழல் குறித்தும் பஹ்ரைன் அமைச்சருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தேசிய பத்திரிகை தினத்தையொட்டி, பத்திரிகையாளர்களுக்கு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்நாளையொட்டி தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஜனநாயக நாட்டில் பத்திரிகைகள்தான் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் இருக்க வகை செய்வதாக கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உண்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் பணியாற்றி வரும் பத்திரிகையாளர்களுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாக கருதப்படும் பத்திரிகைகள் துடிப்புடனும், பொறுப்புடனும் செயல்படுவதை வலுப்படுத்த பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதிபூண்டிருப்பதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் முதலீட்டு விளம்பரம் ஒன்றில் பேசுவது போல முகநூலில் வெளியாகியுள்ள வீடியோ போலியானது என்று மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அலுவலகத்தின் உண்மை கண்டறியும் பிரிவு வெளியிட்டுள்ள விளக்கத்தில் இதுபோன்ற போலியான விளம்பரங்களை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது பணத்தை முதலீடு செய்வதற்கு முன் அதுகுறித் தகவல்களை உறுதி செய்யுமாறும் அந்த அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் உத்தம்பூர் மக்களவைத் தொகுதியில் பிரதமரின் கிராம சாலை திட்டத்தின்கீழ், தொள்ளாயிரத்து 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள சாலைப் பணிகளுக்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இதுதவிர அந்த தொகுதியில் 86 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

புதிய திட்டப் பணிகளின் மூலம், கிராம சாலைகள் மேம்பாட்டில் நாட்டில் முன்னணியில் உள்ள 3 மாவட்டங்களில் ஒன்றாக உத்தம்பூர் உருவெடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமரின் முன்மாதிரி கிராம திட்டம் தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் உள்ள 26 கிராமங்களில் அங்கன்வாடி மையம், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மேற்குவங்க ஆளுநர் மாளிகையில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் வினியோகிக்கப்படுவதாக திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கல்யாண் பானர்ஜி கூறியுள்ள குற்றச்சாட்டு பொறுப்பற்ற செயல் என்று அம்மாநில ஆளுநர் திரு. ஆனந்த போஸ் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கல்யாண் பானர்ஜியின் கருத்து மக்களின் உணர்வுகளைத் தூண்டக் கூடியதாக உள்ளது என்று குற்றம் சாட்டினார்.

ஆளுநர் மாளிகை திறந்தே இருப்பதாகவும், கல்யாண் பானர்ஜி அல்லது சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ, பத்திரிகையாளர்களோ இங்கு வந்து ஆயுதங்கள் இருக்கிறதா என்பதை பார்வையிடலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தில் திரு. கல்யாண் பானர்ஜிக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லி கார் வெடிகுண்டு சம்பவத்திற்குப் பிறகு செங்கோட்டை மெட்ரோ ரயில் நிலையம் இன்று திறக்கப்பட்டது.

கடந்த 10ஆம் தேதி நிகழ்ந்த இந்த சபம்வத்தில் 12 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக செங்கோட்டை மெட்ரா ரயில் நிலையம் மூடப்பட்டிருந்தது.

மெட்ரோ ரயில் நிலையத்தின் நான்கு வாயில்களும் இன்று திறந்துவிடப்பட்டதையடுத்து பயணிகள் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெறுவதாக தில்லி மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே கார் குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் தடய அறிவியல் துறையினர் மேற்கொண்ட சோதனையின்போது 3 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

எனினும் அந்த இடத்தில் துப்பாக்கியோ அல்லது வேறு ஆயுதங்களோ சிக்கவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தின் சோன்பத்ரா மாவட்டத்தில் உள்ள கல்குவாரியில் பாறைகள் சரிந்து விழுந்ததில் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு தொழிலாளர் உயிரிழந்தார்.

பாறைகளுக்கு இடையே சிக்கியுள்ள 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை மீட்கும் பணியில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினரும், உள்ளூர் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

சுரங்கத்தின் உட்புறத்தில் இருந்த சுவர் ஒன்று சரிந்ததே இதற்கு காரணம் என்று அம்மாநில கூடுதல் டி.ஜி.பி. திரு. பியூஷ் மோர்டியா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் உள்ள எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையின்போது சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்று கண்டறியப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

*அம்மாவட்டத்தின் Upper Bangai கிராமத்தில் இந்த வெடிகுண்டு செயலிழக்கச் செய்யப்பட்டபோது அருகில் இருந்த வீடு ஒன்று சேதமடைந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

**<<<<>>>>**

*ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் அருகே ட்ரக்கும்-டெம்போ வாகனமும் மோதிக்கொண்ட விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.*

*விபத்துக்குள்ளான டெம்போவில் பயணம் செய்து காயமடைந்த 12 பேர் ஜோத்பூர் MDM மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அந்த மருத்துவமனையின் கண்காணிப்பாளர் திரு. விகாஷ் குமார் தெரிவித்துள்ளார்.*

*இவர்களில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

**<<<<>>>>**

*Deaflympic போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.*

*டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் இந்தியாவின் தனுஷ் ஸ்ரீகாந்த் தங்கப் பதக்கத்தையும், முகமது வானியா வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.*

------------

*கொல்கத்தாவில் நடைபெற்று வரும் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 124 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆடி வரும் இந்தியா சற்றுமுன் வரை 3 விக்கெட் இழப்புக்கு 33 ரன் எடுத்துள்ளது.*

*தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 159 ரன்னும், இரண்டாவது இன்னிங்சில் 153 ரன்னும் எடுத்தது.*

*இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 189 ரன்.*

**<<<<>>>>**